

திருச்சிராப்பள்ளி

# தாயுமானவர் திருக்கோயில்

# தல-வரலாறு

தாயுமானவர் திருக்கோயில் வெளியீடு

T-UN-284

உ
சிவமயம்.

# தாயான செல்வர் திருக்கோயில் வரலாறு.



ஐந்தாம் பதிப்பு.

1962.

இந்நூலில் காணப்படும் புகைப்படங்களும், நூலும் இத்திருக்கோயில் நிர்வாகத்தினரால் உரிமை செய்யப்பெற்றது. இவைகளை வெளியிட யாருக்கும் உரிமை கிடையாது.

[விலை 50 புதிய காசுகள்.

# முன்னுரை

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி'' என்று தொல்காப்பியம் பேசும் பெருமைக்குப் பொய்யாச் சான்றாக, வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டு இறைவன் திருக் கோயில் கொண்டுள்ள திருத்தலங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குவது திரிசிராமலையில் விளங்கும் தாயுமானவர் திருக்கோயில். கல்லிலே கனல் எழுப்பி தங்கள் அழியாத எண்ணத்தை. அழியாத வண்ணத்தில் படைத்துக்களித்த பல்லவப்பேரரசுகளால் அமைக்கப்பட்டது, இத்திருக்கோயில், ''மாசில் வீணையும் மாலைமதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசுவண்டறைப் பொய்கையும்'' என்று அப்பர் பெருமான் கூறுவது போன்று இத்திரிசிராமலையின் உச்சியில், மாலை வேளையில் நின்று, இறைவனின் எழிற் படைப்பைக் காணும் போது ஒரு பழுத்த நாத்தீகனின் மனச்சாட்சி அவனை இடித்து, இறைவனின் மாட்சியை உணர்த்துவது கண்கூடு.

மலையின் மேல் சென்று, இறைவனை வழிபடுவோருக்குக் குடி தண்ணீர் இல்லாத பெருங்குறையைப் போக்கத் திட்டம் செய்து, அதைச் செயலாற்றி ''மலை முழுவதும் தண்ணீர் வழங்கும் குடி தண்ணீர் திட்டம் 28—10—1956 அன்று பூர்த்தி செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு உறு துணையாய் நின்று செயலாற்றிய தர்மகர்த்தர்களுக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் இறைவன் திருவருள் புரிந்து, அவர்கள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

தாயான செல்வருக்கு, அண்மையில், 5301 தோலா எடையில், ''நாகாபரணக்கமிட்டியினரின் பெருமுயற்சியாலும் தமிழ்ப்பெருங்குடி மக்களின் பேராதரவாலும், வெள்ளி நாகாபரணம் செய்து 16—7—1958 அன்று திரு. தாயான செல்வருக்கு அணிவிக்கப்பட்டது. இச்சீரிய முயற்சியில் ஈடுபட்டுச் செயலாற்றிய அனைவருக்கும் எங்களது உளங்கனிந்த நன்றியும், தாயான செல்வரின் பெருங் கருணையும் என்றென்றும் உடைத்து.

திருச்சி நகரின் கண் போன்று விளங்கும் மாணிக்க விநாயகர் சன்னதி மிகவும் குறுகலாக இருப்பதை முன்னிட்டு, அதன் அருகே பாழடைந்துகிடந்த பெரிய மண்டபத்தைத் திறந்து பழுது பார்தது, அதில் உத்சவ விநாயகரையும், பிரதிட்டை செய்து விளம்பி ஆண்டு கார்த்திகை திங்கள் 2-ம் நாள் (17—11—1958) திருச்சி நகர வணிகர் பெருமக்கள், பொது மக்கள், ஆதரவிலும், அப்பொழுது நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய திரு. எம். பரமசிவம், எம். ஏ. அவர்கள் முயற்சியாலும், அப்போது தர்மகர்த்தர்களாக விளங்கிய திருவாளர்கள் டி எம். முத்துசாமிபிள்ளை, ஏ. சிதம்பரம்பிள்ளை, ஆர். சின்னையநாயுடு கே. சின்னசாமி அய்யர், ஏ. ஜி. சன்ஜி, போன்றோரது ஒத்துழைப்பாலும் குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. அது போழ்து முன்னாள் ஆணையர் உயர்திரு. அ உத்தண்டராம பிள்ளை பி. ஏ. பி. எல்., ஐ. ஏ. எஸ்., அவர்களும் கலந்து கொண்டார்கள்.

உலகமெங்குமிருந்து வரும், கோடிக்கணக்கான மக்கள் கண்டுகளிக்கும் இப்பெருந்தலம். இந்தியப்பெரு நகரங்களுள் ஒன்று. தமிழ்நாட்டின் தலைசிறந்த நகரங்களில் ஒன்று அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர். தாயுமான அடிகள், ஆகியோரால் பாடல் பெற்றதலம். "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்ற மணிவாசகப்பெருமானின் திருவாசக மொழிக்கேற்ப, இங்கே கோயில கொண்டுள்ள ஈசன், தாயாகவே வந்து "இரத்தினவதி" என்னும் வணிககுலப்பெண்ணுக்கு "மகப்பேறு நோவு" தீர்த்துப்பெருமை கொண்டார். மலைமேல் கோயில் கொண்டுள்ள தாயுமானவருக்குரிய நந்தியம் பெருமானும், கொடிமரமும், கீழே நந்திகோயில் தெருவில் உள்ளது. இங்கு பாழடைந்துகிடந்த இக்கோயில் இப்பொழுது சுமார் ரூ. 10,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டு காட்சிக்கும், கருத்துக்கும் பெருவிருந்தாகி வருகின்றது. இத் திருக்கோயிலுக்கு சொந்தமான தெப்பக்குளத்தை 23—6—1949 அன்று ஏற்பட்ட உடன்படிக்கைப்படி 99-ஆண்டு குத்தகைக்கு நகராட்சி மன்றத்தார் எடுத்துள்ளனர். உய்யக்கொண்டான் ஆற்றிலிருந்து வந்துகொண்டிருந்த அசுத்தமான தண்ணீருக்கு பதில் சுத்தமான காவேரி நீர் விடப்படுகிறது. இந்த ஆண்டு ஆரம்பத்தில் அதன் நடு மண்டபத்தை சுத்தப்படுத்தி மராமத்து வேலைகள்

செய்து அதன் விமானத்திற்கு எண்ணெ வர்ணம் வைப்பது உள்பட சுமார் ரூ. 2000 செலவிடப்பட்டிருக்கின்றது.


இன்னும் தாயான செல்வர் திருக்கோயிலின் வரலாற்றையும் இறைவனது திருவிளையாடல்களையும், சமயகுரவர் பாடல்களையும், வரலாற்றுச்செல்வர் ஆர். பஞ்சநதம் பிள்ளை அவர்கள் எழுதிய இந்நூலின் வாயிலாக அறிந்து அனைவரும் பிறவிப்பெரும்பயனைப் பெற்றுய்ய தாயான செல்வர் திருவடிபணிகின்றோம்.

இந்நூலுக்கு வேண்டிய ஆதாரங்கள் கொடுத்துதவிய திரு. S. திருநாவுக்கரசுப் பிள்ளை, அவர்களுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

A முத்துக்குமரன்,
நிர்வாக அறங்காவலர்.

S. மகாராஜன், B.A. B.T.
நிர்வாக அதிகாரி.

R. ஜெயதேவன், A. G. சன்னுசி.
அறங்காவலர்கள்



Lord Thayumanavar on Rishabha

உ
சிவமயம்

# திரிசிராமலைக்கோயில் வரலாறு

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

## 1. தலமும் பெயர்களும்

ஆதிநடு அந்தங்கடந்த, பரம்பொருளாகிய இறைவன் உலகத்தில் உள்ள உயிர்கள் துன்பங்கள் நீங்கிச் சுகம் பெற்றுய்யும் வண்ணம் ஆங்காங்குள்ள பல கோயில்களில் எழுந்தருளியிருந்து அருள் செய்து வருகின்றான். தமிழ் நாட்டில் அத்தகைய சைவத் தலங்கள் 274 உள்ளன. அவற்றுள் பள்ளி என்ற முடிபைக்கொண்ட பல திருப்பதிகளுள், என்றும் வற்றாத புனலுடைய கங்கையிற் புனிதமாகிய காவிரி பாயும் சோழநாட்டில், காவிரிக்குத் தென்கரையில் திருச்சிராப்பள்ளி என்னும் ஓர் சிறந்த தலம் உள்ளது. இது திரிசிராமலை, திரிசிரபுரம் திரிசிரகிரி, முத்தலைமலை, பிரமகிரி எனவும் பெயர்கள் பெறும். பள்ளி என்பது கோவில் எனப் பொருள்படும். திரிசிரன் என்னும் அரக்கன் அரசாண்டு இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற தால் இப்பெயர் உண்டாயிற்று என்று புராணங்கூறும். இதை அன்றி இம்மலையில் திரிசிரம்-அதாவது சுவாமி, அம்மன், உச்சிப்பிள்ளையார் என்னும் மூன்று சிகரங்கள் உள்ளமையால் இப்பெயர் பெற்றதென்றும் அறிஞர் கூறு வர். பிரமனுடைய பெயர் அமைந்ததால் பிரமகிரி எனவும், பார்வைக்கு ரிஷபம்போல் தோன்றுவதால் ரிஷபாசலம் எனவும் பெயர்பெறும். கைலைமலையின் தொடர்பு பெற்ற தால் இது தென் கைலாயம் எனச் சிறப்பாகச் சொல்லப்

படும். சிலையில்-கல்லில் குடைத்த பள்ளி என்னும் பொருளில் சிலைப்பள்ளி, சிலாப்பள்ளி, சிராப்பள்ளி என்னும் பெயர்கள் அமைந்ததாக ஆராச்சியாளர் கூறுவர். திருச்சி டவுன் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும், திருச்சி கோட்டை ஸ்டேஷனிலிருந்தும் இத்தலத்தை அடையலாம்.

## 2. மூர்த்திகளின் பெயர்கள்

மலைமேல் எழுந்தருளியிருக்கும் இறைவருக்குச் செவ்வந்திநாதர், திருமலைக் கொழுந்தர், தாயுமானவர் என்னும் பெயர்கள் வழங்கும். அம்பிகையின் பெயர் மட்டுவார் குழலம்மை. வடமொழியில் மாத்ரு பூதேஸ்வரர் – சுகந்த குந்தளாம்பிகை என்னும் பெயர்கள் உண்டு. பழய சாஸனங்களால் இம்மலைக்குத் திருமலை என்னும் பெயரும், இறைவனுக்குத் திருமலைப்பெருமான் அடிகள் என்னும் திருநாமமும், நகருக்குச் சிற்றம்பர் என்ற பெயரும் உண்டென்று தெரிகிறது. சாரமாமுனிவர் செவ்வந்தி மலரால் பூசித்த காரணத்தால் செவ்வந்திநாதர் என்றும், மலையின் கொழுந்தாயிருப்பதால் திருமலைக்கொழுந்தர் என்றும், ஓர் பெண்ணின் அன்புக்காக தாயாக வந்து, உதவியதால் தாயுமானவர் என்றும் பெயர்கள் வழங்கலாயின. தல விநாயகர், செவ்வந்தி விநாயகர் என வழங்கப் பெறுவர். கோவிலின் அடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சன்னதி பிரசித்தி பெற்று விளங்குகிறது.

## 3. தீர்த்தங்கள்

இக்கோயிலுக்குரிய தீர்த்தங்கள் காவிரி, சிவகங்கை, சோமரோகணி என்னும் பிரமதீர்த்தம், நன்றுடையான், தீயதில்லான் முதலியன.

1. காவிரி:— இது ஊருக்கு வடக்கே அரைமைல் தூரத்தில் ஓடுகிறது. 'குடக காவிரி நீளலை சூடிய திரிசிரா மலை மேலுரைவீர' என்னும் திருப்புகழ் வரியின்படி காவிரி முற்காலத்தில் மலைக்கு அருகில் ஓடியதாகத் தெரிகிறது.

2. சிவகங்கை:— இது கோவிலுக்கு வடமேற்கில் நாகநாதசுவாமி கோவிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

(இவ்விடத்தில் அம்பிகை பெருமானை மணப்பதற்குத் தவம் செய்ததாகச் சொல்லப்படுகிறது.)

3 சோமரோகணி:— இது பிரம தீர்த்தம் என்றும் சொல்லப்படும் இது கோயிலுக்கு மேல்புறம் மைய மண்டபத்துடன் அமைந்த அழகுள்ள தெப்பக்குளம் ஆகும். 16-வது நூற்றுண்டில் திருச்சியை ஆண்ட விசுவநாத நாயக்கரால் கட்டப் பெற்றது. இதில் பங்குனி மாதத்தில் தெப்பத் திருவிழா நடைபெறும். இக்குளம் என்டோவ்மெண்ட் போர்டின் உத்திரவுப் பிரகாரம் (23—6—49) தேதி உள்ள ஒப்பந்தபடி திருச்சி நகரசபைக்கு 99 வருஷங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

4. நன்றுடையான்:— இது திருச்சி டவுன் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலும் கோவிலிக்குக் கிழக்காக ¼ மைல் தூரத்திலும் உள்ளது.

5. தீயதில்லான்:— இது கோவிலுக்குத் தெற்கில் உட்குளம் என்னு பெயருடன் அமைந்துள்ளது தற்போது இவ்விடத்திலேயே அம்மன் தவஞ்செய்யும் விழா சித்திரை மாதம் பிரமோத்ஸவத்தில் 6-ம் திருநாள் நடைபெறுகிறது.

இவற்றுள் நன்றுடையான், தீயதில்லான் என்பவற்றை, திருஞானசம்பந்தர் தேவாரத்தின் முதற் செய்யுளில் காணலாம்.

## 4. தலப்பெருமை

தென்னுட்டில் இத்தலம் தெக்ஷிண கைலாசம் என்று சொல்லப்படுகிறது. இத்தலம் கீழேயிருந்து சுவாமி சந்நிதி வரையில் மேல் தளம் மூடப்பட்ட படி வழிகளைக் கொண்டது. அம்மன் கோவிலுக்கு மேல் உள்ள சுவாமி கோயில் மாடிக்கட்டிடமாக (terraced) அமைந்துள்ளது. ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் 23, 24. 25 தேதிகளில் மூல லிங்கத்தின் மேல் மாலைச் சூரியனின் கதிர்கள் பிரகாசிப்பதுண்டு. இதைச் சூரிய பூஜை என்பர். மலையின் மேலும் கீழும் கல்லில் குடையப்பட்ட இரு குகைக் கோயில்கள் உள்ளன. மேல்குகையில் கிரந்தத்திலும் தமிழிலும் பல

கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. கற்கோயிலாகிய இத்தலத்துக்குச் சொற் கோயில்களாகிய பல இலக்கியங் களும் பெருமையளிக்கின்றன. நகருக்கு நடுவே மலை யமைந்து ஆங்காங்கிருந்து தரிசனம் செய்வோர்க்கு நாயக மாக விளங்குகிறது. சங்க நூல்களில் இம்மலை நெடும் பெருங்குன்றம் எனப் புகழப்பட்டுள்ளது. அகநானூற்றில் "கரங்கிசை விழவின் உறந்தைக்குணது – நெடும்பெருங் குன்றம்" என்று கூறப்பட்டுள்ளது.

புராணத்தின்படி மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. திருவாரூரில் பிறந்தடையும் முத்திப்பேறும், இத்தலத்தில் எளிதில் கிடைக்கும். தெரிந்தும தெரியாமலும் செய்கின்ற பாவங்கள் தீரும். தலப்பெயரைப் பக்தியுடன் சொன்னாலும் தீவினை நீங்குமென்பது அப்பர் சுவாமிகளின் அருள் வாக்கு.

சித்திரை மாதப்பிறப்பிலும், கடைசியிலும், பூரநட்சத் திரம் நவமி திதி கூடிய சுபதினத்திலும் கிரியை வலம் வரு வோர் எண்ணிய பேற்றைப் பெறுவர். சோமவாரம ரோகணி நட்சத்திரம் கூடிய நன்னாளிலும், பங்குனி மாதத் திலும் பிரம தீர்த்தத்தில் மூழ்கி வழிபடுவோருக்குச் சகல பேறுகளும் சித்திக்கும். புரட்டாசிப் பௌர்ணமியில் சிவகங்கையில் மூழ்கித் தும்பை மலரைச் சூட்டி வணங்கு வோர் நல்வாழ்வு பெறுவர்.

## 5. புராண வரலாறுகள்

### (1) பூர்வ வரலாறு

முன்பு ஒரு காலத்தில் திருக்கைலாயகிரியில் வீற்றிருக் கும் சிவபெருமானை வணங்குவதற்காகத் தேவர் முதலிய யாவரும் வந்திருந்தனர். அப்போது ஆதிசேடன் வர அவனை யாவரும் புகழ்ந்து கொண்டாடினர். இதைக் கண்ட வாயுதேவன் மிகுந்த பொறாமையுற்று ஆதிசேடனை இகழ்ந்து பேசலானான். பின்பு இருவரும் இது காரணமாக மிகவும் மனத்தாங்கல்கொண்டு தங்களைப் பற்றித் தற்பெருமை பாராட்டிக்கொண்டதோடு, தங்கள் வல்லமை களைச் சோதிக்கவும் முற்பட்டனர். பின்பு ஆதிசேடன் தன் உடலால் கைலைமலையை இறுகப் பிணித்துக்கொண்டான்.



இரத்திஞவதி

வாயுதேவன் தன் பலங்கொண்ட மட்டும் காற்றை வீசத் தொடங்கவே, உலகமெல்லாம் அதிரத்தொடங்கின. அப்போது கைலேமலையிலிருந்து மூன்று துண்டுகள் கிளம்பி ஒன்று திருக்காளத்தியிலும், மற்றென்று திரிசிராமலையிலும், வேறென்று இலங்கையிலுள்ள திருக்கோணமலையிலும் விழுந்தன. திருக்கைலே மலையின் துண்டுகள் விழப்பெற்றமையால் இவை மூன்றும் தென் கைலாயம் எனப்பெயர் பெற்றன' இவற்றுள் திருக்காளத்தி, திருக்கோணமலை இவைகளுக்கு நடுநாயகமாகத் திரிசிராமலை இருப்பதால் இதற்கு அதிக மகிமை உண்டு. சங்க நூல்களில இத்தலத்தைப்பற்றிய பாடல்கள் வருவதால் இதன் பழமை நன்கு தெரியவரும்.

## (2) இறைவன் தாயான வரலாறு

சோழநாட்டில் காவிரி கடலோடு சேரும் இடமும் பல வளங்களும் நிறைந்து சோழர்களுக்குத் தலைநகரமாய் விளங்கியதும், இயற்பகை நாயனும், பட்டினத்தடிகளும் அவதரிப்பதற்குககாரணமாய் இருந்ததுமாகிய காவிரிப்பூம் பட்டினம் என்னும் ஊர் ஒன்று உண்டு. இது புகார் எனவும் வழங்கும். இந்தப் பதியில் வணிகர் குலத்தில் பெருங் குடியிற் பிறந்த இரத்தினகுப்தன் என்பவன் தன் கற்புடைய மனைவியோடு இல்லறம் நடத்தி வருங்கால், புத்திரப்பேறின்றி இறைவனை வழிபட்டுவந்தான். இறைவன் திருவருளால் ஓர் புதல்வியைப் பெற்றெடுத்து அவளுக்கு இரத்தினவதி என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தான். இரத்தினவதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்து மணப் பருவத்தை அடைந்தாள். இரத்தினகுப்தன் இரத்னவதியைத் திரிசிராமலையில் வாழும் தனகுப்தன் என்னும் வணிகனுக்குத் தனது இல்லத்திலேயே மணம் செய்து கொடுததுப பல சீர்வரிசைகளுடன் ஊருக்கு அனுப்பிவைத்தான். வந்தது முதல் தினமும் இரத்தினவதி திரிசிராமலை செவ்வந்திநாதரை தவராமல் அன்புடன் வழிபட்டு வந்தாள். நாளடைவில் இரத்தினவதி சிராமலைப் பெருமான் அருளினல் கருப்பவதி ஆகி, பேறு காலம் எய்தினள். இச்செய்தியை காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள தன் தாய்க்குத் தெரிவித்தாள். தாயும் மகளுக்கு வேண்டிய மருந்து எண்ணெய் முதலியவைகளுடன் புறப்பட்டு வரும்போது காவிரியாற்றில் வெள்ளப்பெருக்கு மிகுதியாகி அவளை வரமுடியாதபடி தடுத்துவிட்டது.

மகளும் "தாய் இன்று வருவாள், நாளை வருவாள். நமக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டுவருவாள்" என்று எண்ணிக்கொண்டிருந்தாள். பிரசவ நேரம் நெருங்கியும் தாய் வரவில்லை. இச்சமயத்தில், இரத்தினவதி தான் வழிபட்டுவந்த சிராமலை செவ்வந்திநாதரை வேண்ட.

"சங்க ரன்சிவன் சதாசிவ னீசனீ சானன்
புங்க வன்றிரி புராந்தகன் புராதனன் புராணன்
கங்கை நாயகன் கறைமிடற் றிறைநுதற் கண்ணன்
எங்க ணாயக னிராமன் சிராமலை யிறைவன்

பூர ணன்பரன் பராபரன் வெள்ளியம் பொருப்பன்
கார ணன்மத னந்தகன் காலனைக் கடிந்தோன்
வார ணந்தனை யுரித்தவன் மறைப்பொருள்வகுத்தோன்
நார ணன்றனக் கரியவன் சிராமலை நாதன்"!

சிவபெருமானர் இரத்தினவதியின் தாய் வேடங் கொண்டு பிரசவ வேதனையால் வருந்திக்கொண்டிருந்த இரத்தினவதியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். பெண்ணும் வந்தவளைத் தாயெனவே எண்ணி மகிழ்ந்தாள், தாயும் ஆனவரும் வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். இரத்தின வதி சுகமாகப் பிரசவித்தாள். அழகிய ஓர் ஆண்குழந்தை பிறந்தது. தாயாக வந்தவர் சிலநாள் தங்கிக் குழந்தையை யும், தாயையும் பாதுகாத்து வந்தார். இது இவ்வாறாக, வெள்ளம் வடிந்தவுடன் உண்மைத்தாய் நதியைக் கடந்து இரத்தினவதியின் வீட்டிற்கு வந்தாள். இரத்தினவதியும் கண்டாள், திகைத்தாள். இரு தாயாருள் எவர் உண்மைத் தாய் என்று கவனித்தாள. தாயாக வந்தவர் உடனே மறைந்து ஆகாயத்தில் இடபவாகனத்தில் காட்சி கொடுத் தார். எல்லோரும் தரிசித்து இன்புற்றார்கள். அன்று முதல் இக்கோயில் சிராமலைச் செவ்வந்திநாதருக்கு தாயுமானவர் என்ற பெயரும் உண்டாயிற்று. இரத்தினவதியும் பெரு மானை வழிபட்டதால் அடியார்களுள் ஒருவராக இன்றும விளங்குகிருள். (இவ்வரலாறு கோயில பிரம உற்சவத்தின் 5-ந் திருவிழாவன்று சிறப்பாக நடைபெறுகிறது) இதைக் குறிக்கும் சித்திரங்கள் மேல் மண்டபச் சுவரில் வரையப் பட்டுள்ளன.

## (3) இறைவர் மேற்குமுகங் கொண்டது

சாரமா முனிவர் என்பவர் சிராமலைப் பெருமானுக்கென்று ஓர் நந்தவனம் ஏற்படுத்தி அதில் நாகலோகத்திலிருந்து கொண்டுவந்த செவ்வந்தி மலரைப் பயிரிட்டுத் தினந்தோறும் அம்மலரைக்கொண்டு பெருமானைப் பூஜித்து வந்தார். கோழியூர் என்னும் உறையூரில் பராந்தகச் சோழன் என்பவன் அரசாண்டு வந்த காலத்தில் பூவாணிகன் ஒருவன் முனிவருடைய நந்தவனத்தில் புகுந்து செவ்வந்தி மலர்களைக் கவர்ந்து அரசனது தேவிக்குக் கொடுத்து வந்தான். முனிவர் ஒரு நாள் மறைந்திருந்து கவனித்து அரசனிடம் முறையிட்டார். அரசன் அவனைக் கண்டிக்கவில்லை. முனிவர் பெருமானிடம் முறையிட்டார். சிராமலை இறைவர் கிழக்கிலிருந்து மேற்கு முகந் திரும்பினர் பல மேகங்களைக் கொண்டு உறையூரில் மண்மாரி பொழியச் செய்தார். அரசனும் கர்பமுற்ற மனைவியும் வெளியேகினர். உறையூர் மண்மாரியால் அழிந்தது. மண்மாரியும் அரசனைப் பின்பற்றிச் சென்றது. முடிவில் மன்னன் மாண்டான். காவிரியில் தவறி வீழ்ந்து தப்பிய தேவியான புவனமாதேவி ஓர் பிராமணனால் காப்பாற்றப்பட்டு ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தனள். இக் குழந்தை பிற்காலத்தில் கரிகால் சோழன் என விளங்கியது.

## (4) தான்றேன்றீஸ்வரர் வரலாறு

மனுகுலத்தில் தோன்றிய ஜனநாதச்சோழனுக்குச் சூரவாதித்த சோழன் என்பவன் புதல்வனாகப்பிறந்து ஓர் கோழியானது யானையை வென்ற காரணத்தால் கோழியூர் என்று பெயர் பெற்ற உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான். ஒரு நாள் சோழன் வேட்டையாடும் பொருட்டுச் சாரமாமுனிவரின் நந்தவனப் பக்கத்தில் சென்றான் அப்போது ஆதிசேடனின் புதல்விகளாகிய நாக கன்னிகைகள் எழுவர் செவ்வந்தி மலருடன் சிராமலை நாதரைப் பூஜிக்கச் சென்றனர். அரசன் அவர்களைக்கண்டு மணம் செய்துகொள்ள விரும்பினன். அவர்கள் சம்மதிக்கவில்லை. அரசன் நாகலோகஞ் சென்று ஆதிசேடனின் சம்மதம் பெற்றுக் கன்னிகைகளில் காந்திமதி என்பவளை மணம் செய்து ஆதிசேடனால் கொடுக்கப்பட்ட சிவலிங்கத்தையும், வாட்படையையும் பெற்றுத்தன் நகரம் மீண்டு தான் கொண்டுவந்த லிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூஜித்துவந்தான்.

சோழன் மனைவியான காந்திமதியும் பக்திமேலீட்டால் கணவனின் அனுமதி பெற்றுத் தினந்தோறும் கால் வருந்த நடந்துசென்று திரிசிராமலைநாதரை வழிபட்டு வந்தாள். நாளடைவில் காந்திமதி கருப்பமுற்றும் தவருமல் தரிசித்து வந்தாள். ஒருநாள் சூரிய வெப்பத்தால் நடக்க சக்தியற்றுச் சோர்ந்து வழியில் கீழே விழுந்தாள். 'இன்றைக்குத் தரிசனம் கிடைக்காமற் போயிற்றே' என்று மனம் வருந்தினுள்.

உண்மை அடியார் துயரத்தை உடனே அகற்றும்படியான சிராமலை நாதர் அவ்விடத்தில் சுயம்பு லிங்கமாகத் தோன்றிக் காந்திமதிக்குக் காட்சி கொடுத்தார். இறைவர் சுயம்புவாகத் தோன்றியதால் தான்ரேன்றீஸ்வரர் எனப் பெயர் ஏற்பட்டது. காந்திமதியும் பெருமானைப் பலவாறு போற்றிப் புகழ்ந்து தன் நகரம் மீண்டாள். சூரவாதித்தன் இவ்வற்புதத்தைக் கேட்டுத் தான்ரேன்றீஸ்வரருக்குத் தனி ஆலயம் அமைத்துப் பூஜைகள் நடைபெறும்படிச் செய்தான். இக்கோயில் உறையூருக்குச் செல்லும் சாலையின் இடையில் உள்ளது. இதன் பெயரால் திருத்தாந்தோன்றி என்னும் கிராமமும் பக்கத்தில் உள்ளது.

## (5) மட்டுவார்குழலியம்மை திருமணம்

உமாதேவியார் சிவபெருமானைப் பூஜிக்கவும் மணம் செய்துகொள்ளவும் விரும்பி இத்தலத்தில் ஓர் தாமரை மலரில் சிறிய பெண்குழந்தை வடிவங்கொண்டு தோன்றி காத்தியாயவ முனிவரால் வளர்க்கப்பெற்று வந்தார். பெண்ணின் கூந்தல் இயல்பாகவே நல்மணம் வீசப்பெற்றதால் மட்டுவார்குழலி என அழைக்கப்பெற்ருர். அம்மையார் சிவகங்கை என்னும் தீர்த்தத்தில் முழுகிப் பக்கத்தில் சுயம்புவாய்த் தோன்றிய லிங்கத்தைப் பூசித்துத் தவம் செய்து வரலானுர். இந்த இடம் நாகநாத சுவாமி கோயிலாக விளங்குகிறது. பெருமான் அவருடைய ஆதி விருப்பத்தை நிறைவேற்றக்கருதி எழுந்தருளி வந்து காட்சி கொடுத்து மணம் செய்துகொண்டார். சித்திரைத் திருவிழாவில் 6-வது நாளில் திருமண விழா நடைபெறும்.

இதனுல் சிவமாகிய செம்பொருள் சக்தியுடன் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெருதென்பதும், இறைவன் சக்தியைக்கொண்டே ஐந்தொழில்களையும் நடத்துகின்ருன் என்பதும் புலகுகின்றன.



Mother Mattuvar Kuhzalammai
on Rishabha

## (6) தாயுமான அடிகள் வரலாறு

சோழநாட்டில் வேதாரண்யம் என்று வழங்கப்படும் திருமறைக்காட்டில் இன்றைக்கு சுமார் 300 ஆண்டுகட்கு முன் சைவ வேளாளர் மரபில் கேடிலியப்பபிள்ளை என்பவர் வாழ்ந்துவந்தார். அந்நாளில், திருச்சிராப்பள்ளியில் அரசு புரிந்த விஜயரெகுநாத சொக்கலிங்க நாயக்கர் கேடிலியப்ப பிள்ளையின் நற்குணங்களைக் கேள்வியுற்று அவரை வரவழைத்து தமது அரசியல் கணக்கர் தொழிலில் அமர்த்தினார். கேடிலியப்பபிள்ளை திரிசிரபுரத்தில் வேலை பார்த்து வரும்போது தமக்கிருந்த சிவசிதம்பரம் என்ற புதல்வனை தமது தமயனுருக்கு சுவீகாரம் செய்து கொடுத்து விட்டதினால் தமக்கு சந்ததி உண்டாகும்படி இத்திருசிராமலையில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ தாயுமானப்பெருமானை தினந்தோறும் அன்புடன் வழிபட்டு வந்தார். பெருமான் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு தாயுமானவர் என்று பெருமான் பெயரையே வைத்தார்.


தாயுமானவர் இளவயதிலேயே கற்கவேண்டியவைகளைக் கற்று கேட்பன கேட்டு பலரும் புகழும் நிலையில் வளர்ந்து வரும்போது தந்தையர் காலஞ்செல்லவே அரசனது விருப்பப்படி தந்தையார் தொழிலை ஏற்று வேலை பார்த்துவந்தார். ஆனால் தாயுமானவருடைய மனம் ஞானாசிரியனைக் கண்டு நல்லுபதேசம் பெற்று பிறவிப்பிணியை நீக்கிக்கொள்ள வேண்டும் என்ற தீவிர எண்ணத்தில் இருந்ததினால் அவர் நாள்தோறும் ஸ்ரீ தாயுமானப் பெருமானை தான் ஈடேறும்படி காதலாகிக் கசிந்து வழிபட்டு வந்தார். அப்போது ஒருநாள் திருமூல நாயனார் மரபில் தோன்றிய மௌனகுரு சுவாமிகள் தலயாத்திரை செய்து வரும்போது இக்கோவிலிலுள்ள தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் நிஷ்டையில் இருந்தார். தாயுமானவர் வழக்கம்போல் சுவாமி தெரிசனம் செய்யவந்ததும் காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்பு போல் நிஷ்டையில் இருந்த மௌனகுருவின் பாதத்தில் விழுந்து இறைஞ்சி நிற்க தாயுமானவரின் மனபக்குவ நிலையைக் கண்டு மௌனகுரு ஞான உபதேசம் செய்ததும் தாயுமானவர் சிவானுபூதிச் செல்வராய் விளங்கி "அங்கிங்குஎனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது" என்ற பாடலைப் பாடியும் வேதாந்த சித்தாந்த சமரசக் கருத்துக்கள் அடங்கி

தும் யாவராலும் புகழப்படுவதுமான அநேக அருட்பாக்களையும் உலகிற்கு தந்தருளியிருக்கிறார். அதனால் இவருக்கு தாயுமான அடிகள் என்ற பெயர் அமைந்தது. அவர் அருளியிருக்கும் பாடல்களில் இக்கோவிலில் திருமேனி கொண்டிருக்கும் தக்ஷிணாமூர்த்தியின் பேரிலும் தன்னை ஆட்கொண்ட மௌனகுருவின் பேரிலும் ஸ்ரீ தாயுமானப் பெருமான் பேரிலும் பாடிய பாடல்கள் சில இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

இவ்வாறு அடிகள் பற்றற்ற நிலையில் வாழ்ந்து பல தலங்களுக்குச் சென்று தெரிசனம் செய்து முடிவில் இராம நாதபுரத்தைச் சேர்ந்த லட்சுமி புரத்தில் 1742-ல் நிருவிகற்ப சமாதியில் இருந்து இறைவன் திருவடியை அடைந்தார். அங்கு அடிகளுடைய கோவிலும் உள்ளது. இவருடைய அருட்பாக்கள் "தாயுமானவர் பாடல்" என வழங்குகின்றன. இப்பாடல்கள் சமரச நோக்குடையவை. இவருடைய மாணுக்கர்களுள் சிறந்தவர் அருளையர் என்பவர். தாயுமான அடிகள் சிவத்தோடு கலந்த தினம் தை மாதம் விசாக நக்ஷத்திரம் ஆகும். அன்று இக்கோவிலில் தாயுமான அடிகளுக்கு விசேஷ அபிஷேகம், அலங்காரமும் உலாவும் நடைபெறுகிறது. மேலும் ஸ்ரீ தாயுமானப்பெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற அடியார்களில் ஒருவராகிய இவருக்கும் சித்திரை மாதம் பிரம்ம உற்சவத்தின் 14-வது நாளில் அடிகள் அருள்பெற்று உய்ந்த ஐதீகமும் இக்கோவிலில் கொண்டாடப்படுகிறது.

## (7) சரித்திர வரலாறு

18-ம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த போர்க் காலங்களில் மலைக்கோயில் வெடிமருந்துக்கூடமாக இருந்தது. இதற்கு அடையாளமாக மலைமேல் உள்ள குகைக் கோயிலில் தரையில் சில குழிகள் உள்ளன. இவ்விடத்தில் ஒரு சமயத்தில் வெடி விபத்து ஏற்பட்டு மேல் பக்கத்துத் தூணில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது கீழ்க் கோபுரவாயிலுக்குப் பக்கத்தில் கடைகளாக உள்ள இடங்கள் முன்பு ஆயிரக்கால் மண்டபமாக இருந்து அவ்விடத்தில் 1772-ல் வெடி விபத்தேற்பட்டுப் பின் கடைகளாக மாற்றப்பட்டன. இம்மண்டபம் 17-ம் நூற்றாண்டில் 'அநுப்பி' என்ற பெண்ணால் கட்டப்பெற்றதென்றும், கோபுரவாயிலின் தூண்களில்



SAINT THAYUMANAR

அப்பெண்ணின் நினைவாக உருவம் அமைக்கப்பட்டுள்ளது வென்றும் வரலாறுகள் வழங்குகின்றன. உச்சிமலைக்கு மேல்புறம் பாறையில் மீன் வடிவம் உள்ளது. இது பாண்டிய மன்னரின் ஆட்சிக்கு அடையாளமாக இருக்கலாமெனக் கூறப்படுகின்றது. 1849-ல் விநாயகசதுர்த்தி விழாவில் எதிர்பாராதபடி ஜனநெருக்கடியால் உச்சிமலையில் ஓர் விபத்து ஏற்பட்டுப் பலர் இறந்தனர். 1866-ல் இரும்புத் தண்டவாளங்கள் இருபுறத்திலும் அமைக்கப்பட்டன.

## 6. குகைக் கோயில்களும் கல்வெட்டுக்களும்

இவ்வாலயத்தில் மலையைக்குடைந்து அமைத்த இரண்டு குகைக் கோயில்கள் உள்ளன ஒன்று மலையின் மேலும், மற்றொன்று அடிவாரத்திலும் உள்ளன. மலை மேலுள்ள குகைக்கோயிலில் உள்ள அடையாளங்களால் 6-வது நூற்றாண்டில் இருந்த பல்லவ அரசனாகிய குணபரன் என்ற மகேந்திரவர்மனால் இவைகட்டப்பட்டன வென்று தெரிகிறது மேல்குகையில் வடமொழியிலும் தமிழிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இவையனறி 104 செய்யுட்கள் அந்தாதியாகக் கல்லில் வெட்டப்பட்டுள்ளன.

### (1) இரண்டு தூண்களில் உள்ள வடமொழிக் கல்வெட்டுக்களின் செய்திகள்

1. காவேரி என்பாள் இனிய நீர்ப்பெருக்கினை உடையவள். சோலைகளை மாலையெனச் சூடியவள். அவளைக்கண்டு நதிப்பிரியனாகிய இந்தத்தேவன் காதலிப்பான் என்று எண்ணி மலைமகள தான் பிறந்த குலத்தைவிட்டு இந்த மலையில் எப்போதும் நிலைத்திருந்து 'இந்நதி பல்லவனுடைய காதலி' யென்று சொல்லிக்கொண்டிருக்கிறாள்.

2. குணபரன் என்ற அரசன் இந்த லிங்கத்தினால் பெற்ற விபட்ச விருத்தியிலிருந்து (ஜைனமதத்திலிருந்து) திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைத்திருப்பதாக.

3. சோழநாட்டின் சிகரமலையான இந்தச் சிவன் கோவில் அழியாத ஆபரணம் போன்றது. இதன் ஜோதி சங்கரனுடைய ஜோதி போன்றது.

4. சத்திய ஸந்தனுடைய பூதவுடல் புகழ்பெற இது கல் தச்சனலே அமைக்கப்பட்டது,

5. மலை உச்சியில் அமைக்கப்பட்ட இந்த விசித்திர மான கற்கோவிலில் ஸ்தாணுவை (சிவனை) அசையாமலி ருக்கும்படி பிரதிஷ்டை செய்து தான் அழியாப் பதவியை அடைந்தான்.

6. சத்துருமல்ல அரசன் அர்த்தபதியாதலின் மலை அரசன் மகளை மணந்த கிரீசனுடைய பெயரின் பொருளை விளக்க இம்மலையில் ஈசனைப் பிரதிஷ்டை செய்தான்.


7. "சோழர்களின் பெரும் செல்வத்தையும் அகன்ற காவேரி நதியையும் பூமியிலிருந்துகொண்டு நான் எவ்வாறு காண்பேன்" என்று வினவிய இறைவருக்குக் குணபரன் வானையளாவிய உன்னதமான இக்கோவிலை அமைத்தான்.

8. நிகரற்ற புருஷோத்தமனல் பார்வதிக்கும் பரம சிவனுக்கும் அமைக்கப்பட்ட இக்கோயில் (உச்சைசிர பர்வதம்) தான் தோன்றியதின் பயனை அடைந்தது. (உச்சைசிரபர்வதம்-உயர்ந்த தலையை உடையது,)

இம்மகேந்திர பல்லவனே சிவனடியாரான திருநாவுக் கரசரைப்பலவாறு துன்புறுத்திப்பின் சைவனுகி உபதேசம் பெற்றுத் தன் பெயரால் 'குணதரவீச்சரம்' என்னும் சிவன் கோவிலையும் திருவதிகையில் கட்டுவித்தான் என்று பெரிய புராணம் கூறும்.

### (2) தமிழ்க் கல்வெட்டுக்கள்

இக்கோயிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் தென்னிந்தியக் கல்வெட்டுப்பகுதிகளில் 1904-ம் ஆண்டில் 770 முதல் 790 எண்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் சில பின்னே காட்டப்படும்.



மலையின் மேல் உள்ள பல்லவர் குகை.

1. மேல் குகைக் கோயிலில் வெளித்தூண் வரிசையில் மூன்றாவது தூணில் 10-வது நூற்றாண்டில் ஆண்ட சோழ வம்சத்து ராஜராஜகேசரி வர்மன் தன் பட்டத்தின் 16-வது ஆண்டில் விக்கிரமசிங்க மூவேந்தவேளான் என்பவன் விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் வாங்கி அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பர் என்னும் திருச்சிராப்பள்ளியில் உள்ள கோவிலுக்கு நிலதானம் செய்த சாசனம்

இதன் விவரம் வருமாறு :—

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கோள் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய வேங்கை நாடுங் கங்கபாடியும் நுளம்பபாடியும் தடிகைப் பாடியும் குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும் திண்டிறல் வென்று தண்டாற் கொண்டதன்னெழில் வளருழியுளெல்லாயாண்டும் தொழுதகைவிளங்கும் யாண்டைச் செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோவிந்தராஜராஜகேசரி பன்மற்குயாண்டு 16-வது: உறையூர்க்கூற்றத்துச் சிற்றம்பர்த் திருச்சிராப்பள்ளி யினிதிருந்தருளிய திரிபுவனபதிக்கு மூலப்பிரதான சண்டேஸ்வரப் பெருமாள் அருளால் பதிபாதமூலப்பட்டுடைப் பஞ்சா சாற்றிய தேவகன்மிகளோமும் சிற்றம்பல ஊரோமும் இத்தேவர் தேவன் — விளத்தூர் நாட்டு, ஆலங்குடி உத்தம சோழபன் மராற்றுக்கீழ்க்கரை, கிழக்கடைய மணலீடும், களரும், திடலுமாய்க் கிடந்த நிலம் 2½ இந்நிலம் இரண்டரையும், சூரலூர் கூற்றத்து சூரலூர் கிழவன் கம்பன மணியநாத. விக்ரமசிங்கமூவேந்த வேளான். இத்தேவர் சித்திரைத் திருநாள் ஒன்பது நாளும் பிராமணரும், சிவயோகியரும், தபஸ்யரும், உண்ண இவன் இந்நிலன் பூத்திவச்சிக் கொள்ளப் பெறுவாராக, விற்றுக் கொடுத்த நிலத்துக் கிசைந்த கீழ்பாற் கெல்லை, திருவரங்க தேவதானம் (கோட்டிடையும்) பஞ்சகத்து நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை நக்கன் மூங்குல முள்ளிட்டாரும், மேம்மட்டியும், நக்கன் கொற்ற விராடியுள்ளிட்ட நிலங்களுக்கு கிழக்கும், வட பாற்கெல்லை திருவரங்க தேவதானம் சாத்தங்குடிக்குத் தெற்கும் இவ்விசைத்த பெருநான்கெல்லையுளகப்பட்ட நிலம் இரண்டரையும் விற்றுக் கொடுத்த நிலத்துக்கு விலை 37 கழஞ்சா கரும்பொன் 85 கழைஞ்சுக்தும் இந்நிலம் 2½ வேலியும் விற்றுக் கொடுத்து இப்பொன் எண்பத்தைந்து கழஞ்சும் பண்டாரத்து வைப்பித்துக்கொண்டு இந்நிலம் சித்திரைத் திருநாள் ஒன்பது,

நாளும் பிராமணரும், சிவயோகிகளும், தபஸ்யரும் உண்ண இந்நிலம் இப்பரிசு கல்மேல் கொள்ளப் பெறு வாராக. சூரலூர் கிழவன் கம்பன் மணியநாத விக்ரமசிங்க மூவேந்த வேளானுக்கு விற்றுக்கொடுத்தோம்."

2. அதே வரிசையில் கடைசித் தூணில் 9-வது நூற்றுண்டில் ஆண்ட பாண்டியாதிபதி மாறன் சடையன் என்னும் வரகுணனையும், திருமலைப் பெருமான் அடிகளின் கோவிலையும் பற்றிய கல்வெட்டு, இது அரசனுடைய பட்டத்தின் 4-வது ஆண்டில் ஏற்பட்டது.

3. குகையின் கிழக்குச் சுவரில் வாயிலுக்கு வலதுபுறம் மேற்சொல்லிய வரகுண பாண்டியன் பொன்காசு தானம் செய்த சாசனம்.

4. மாதுர்பூதேஸ்வரர் கோவிலில் ஓர்பாறையில் விஜய நகர வம்சத்தைச் சேர்ந்த வெங்கடதேவ மகாராயர் சகம் 1539-ம் ஆண்டில் வீரப்ப நாயக்கர் நற்கதியடையும் பொருட்டுச் செய்ததான சாசனம்.

இவற்றுள் மூன்ருவதைத் தவிர மற்றவை சிதைத் துள்ளன.

## 7. மண்டபங்கள்

கோயிலின் அடியிலிருந்து படிக்கட்டின் மேலிடம் கல்லால் ஒட்டப்பெற்றுள்ளது. இக்கோவிலில் ஆயிரக்கால் மண்டபம, வாகன மண்டபம், சகஸ்திரலிங்க மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், சித்திர மண்டபம், பதிறுகால் மண்டபம், மணி மண்டபம் முதலிய மண்டபங்கள் உண்டு. இவற்றுள் ஆயிரக்கால் மண்டபம் இருந்த இடத்தில் தற்போது சடைகள் உள்ளன. நூற்றுக்கால் மண்டபத்துக்கு மேல் வலப்பக்கத்தில் உள்ள சகஸ்திரலிங்க மண்டபத்தில் பல லிங்கங்கள் உள்ளன. இம்மண்டபங்கள் பல மன்னர்களாலும், அபிமானிகளாலும் வெவ்வேறு காலங்களில் கட்டப்பட்டவை.

### (1) வாகன மண்டபம்

இது கோயிலுக்கு முன்னே மேல் புறத்தில் உள்ளது. இதில் ஆத்தான மண்டபம் என்னும் பெயருடன் ஓர் சலவைக்கல் மண்டபம் உள்ளது இதைப் பூவாளூர் தியாகராஜ செட்டியார் என்பவர் கட்டுவித்ததாகப் பின்வரும் செய்யுளால் தெரியவருகிறது.

"அன்றியுந் தென்கயிலையெனுந் திரிசிராப்பள்ளி
யிடையாகசாலை
முன்றயங்குமண்டபத்திலாத்தானமண்டபமென்
முதற்பேர்பூண்டு
மின்றயங்கு மரகதத்தாலியற்றிய தென்றேயெவரும்
விரும்பச்செய்தான்
பொன்றயங்கு மணிபுனைந்த தியாகராசப்பெயர்
கொள்புலவரேறே"

இம் மண்டபத்தில் கோயிலுக்குரிய பல வாகனங்கள் உள்ளன. இதிலிருந்து மூர்த்திகள் அலங்காரத்துடன் வாகனங்களில் புறப்படும். இதற்கு எதிரில் யாகசாலை மண்டபம் உள்ளது.

### (2) நூற்றுக்கால் மண்டபம்

கோவிலுக்குச் செல்லும் வழியில் இடது பக்கத்தில் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. மண்டபத்தின் நடுவில் அழகாக அமைக்கப்பட்ட ஓர் சலவைக்கல் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில், சித்திரை மாதத்தில் நிகழும் பிரமோற்சவத்தின் 5-ந் திருவிழாவில் செட்டிப்பெண் மருத்துவ வைபவமும், 6-ந் திருவிழாவில் திருக்கல்யாண வைபவமும் 14-வது திருவிழாவில் தாயுமான அடிகள் உற்சவ வைபவமும் நிகழும். இதில் சைவசமயப் பிரசங்கங்கள் நடைபெறும்.

இம்மண்டபத்தில் தேவஸ்தான காரியாலயம், உள்ளது.

### (3) சித்திரமண்டபம்

மலைமேல் கோயிலில் சுவாமி சந்நதிக்குப் போகும் வழியில் சித்திரமண்டபம் ஒன்று உள்ளது. இது அம்மன் கோவிலுக்கு மேலே மாடிக்கட்டிடமாக (Terraced) அமைந்துள்ளது. இதில் புராணத்தைத் தழுவிய பல சரித்திரங்களும், சிவபெருமானுடைய பலவேறு வடிவங்களும்

வேறுபல சித்திரங்களும் பல வர்ணங்களில் அழகுடன் வரையப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் அழகிய வேலைத் திறம் பொருந்திய கற்சிற்பங்கள் உள்ளன. கல் வளையங் களும், சிங்கத்தின் வாயிலிருந்து எடுக்கப்பட முடியாத கற் பந்துகளும், அழகிய வடிவங்கள் அமைந்த தூண்களும் பார்ப்பவர்கட்கு வியப்பை அளிக்கும். இம்மண்டபத்தைத் துரையூர் ஜமீன்தார்கள் செப்பனிட்டதாகவும் அதற்கு அறி குறியாக ஜமீன்தார்களின் உருவங்கள் அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் நடராஜர் அபிஷேகங்களும் வேறு பல உற்சவங்களும் வழக்கப்படி நிகழும்.

(4) பதினாறுகால் மண்டபம்

உச்சிமலைக்குப் போகும் வழியில் வலப்பக்கத்தில் பதினாறுகால் மண்டபம் ஒன்றுண்டு. இது தளவாய் முதலி யாரால் சுமார் 1630-ல் கட்டப்பெற்றது. இவ்விடத்தில் வசந்தோற்சவம் நடைபெறும். கோடைக் காலத்தில் இனிய தென்றல் வீசும். கீழவீதியில் தளவாய்க் குளம் என்ற ஓர் குளமும் உண்டு.

(5) மணிமண்டபம்

பதினாறுகால் மண்டபத்துக்கு மேல் உள்ள மணி மண்டபம் காலஞ்சென்ற உறையூர் வணிகச் செல்வர் உலகநாத செட்டியார் அவர்களின் முயற்சியாலும், நகர மாந் தரின் உதவியாலும் 1918-ல் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கட்டப்பட்ட மணி $2\frac{1}{2}$ டன் கனமும், 4 அடி 8 அங் குலம் நீளமும், 4 அடி 6 அங்குலம் குறுக்களவும் கொண் டது. இது நாகைப்பட்டினம் ரயில்வே தொழிற்சாலையில் செய்யப்பட்டு இவ்வூருக்குக் கொண்டுவரப்பெற்றது. தினந்தோறும் காலை முதல் 4, 6, 10, 12, மாலை 6, 10 மணி நேரங்களிலும் விசேஷ நாட்களிலும் மணி அடிக்கப்படு கிறது

## 8. உச்சிப்பிள்ளையார் கோவில்

மலைக்கோவிலின் உச்சியில் பிள்ளையார் கோவில் ஒன்று உண்டு. இதைக் குறித்து ஓர் கதை வழங்கப்படுகின்றது.

விபீஷணன் இராமரிடம் விடைபெற்றுத் தெற்கே வரும் பொழுது உடன் கொண்டுவந்த அரங்கநாதரின் சிலையை, பிராமண உருவங்கொண்டு நின்ற விநாயகரிடம் கொடுத்து வெளியே சென்ருன். விநாயகர் சிறிது நேரம் வைத்திருந்து அவ்விக்கிரகத்தைப் பூமியில் வைத்துவிட்டு ஓடி வந்து மலைமேல் அமர்ந்தார். விபீஷணன் விக்கிரகத்தை எடுக்கப்பார்த்து முடியாமற்போக பிராமணச் சிறுவனைத் துரத்திக்கொண்டு வந்து பார்க்க ஒருவரையுங் காணுமல் விநாயகர் தலையில் ஓங்கிக்குட்டியதாகவும், அரங்கநாதன் திருவரங்கத்தில் தங்கிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. விபீஷணன் பெருமாளை எடுத்துவந்ததைக் காட்டும் சிலை 16 கால் மண்டபத்தில் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

உச்சிப்பிள்ளையார் கோவிலைச் சுற்றிலும் பிரகார மண்டபம் ஒன்றுள்ளது, இவ்விடத்தில் இருந்து காணும் காட்சி கண்கொள்ளாக் கவின்பெறு காட்சியாகும் ஆகாய விமானத்திலிருந்து பார்ப்பதுபோல் தோன்றும் நகரத்தின் நான்கு பக்கங்களிலும் தோன்றும் ஆறுகளும் சோலைகளும் செறிந்த இயற்கைக் காட்சிகளும், செய்குன்றுக்கட்டிடங்களும் கண்களுக்கு விருந்தளிக்கும். இம்மலை பூமியிலிருந்து உச்சிப்பிள்ளையார் கோவில் வரையில் 273 அடி உயரமுள்ளது. 417 படிகளைக்கொண்டது. தாயுமானவர் உட்கோவில் வாயில் வரை 172 படிகள் உள்ளன. குன்றின் மேல் இட்ட மின்சார விளக்கு இரவில் நீலமணியெனத் திகழ்கின்றது. நெடுந்தூரத்திலுள்ளார்க்கும் மலை பகலிலும், விளக்கு இரவிலும் காட்சியளிக்கின்றன. உற்சவ காலங்களில் மின்சார விளக்குகளால் உச்சிமலை அலங்கரிக்கப்படுகிறது

## 9. பூசித்து பேறு பெற்ரோர்.

இத்தலத்தில் உள்ள பெருமானை வழிபட்டுப்பேறு பெற்ரோர் பலர் ஆவர். அவர்களுள், பிரமன், அகஸ்தியர், இந்திரன், உமாதேவி, ஜடாயு, சப்தரிஷிகள், திரிசிரன், இராமர், அர்ச்சுனன், அநுமான், விபீஷணன் திரிசிரன், ஐயனர், நாககன்னிகைகள், சாரமாமுனிவர், வண்டு, சோழன், இரத்தினவதி, மௌனகுரு, தாயுமானஅடிகள் முதலியோர் சிறப்புடையோர் ஆவர் இவர்களுடைய சிலா வடிவங்கள் தனியே அம்மன் கோவிலுக்குப் போகும் வழி

யில் வரிசையாக வைக்கப்பட்டுருக்கின்றன அநுமார் பூசித்ததற்கு அறிகுறியாக இக்கோயிலில் அநும முத்திரை இடப்படுகின்றது.

## 10. தினப்பூஜையும் திருவிழாக்களும்.

இக்கோவிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை' இரவு என்னும் நான்கு காலங்களிலும் அபிஷேக தீபாராதனைகள் நடைபெறுகின்றன. காலை, இரவுப் பூஜை இரண்டும் சர்க்கார் வருமானத்திலிருந்து நடைபெறுகின்றன. உச்சி, மாலைப்பூஜை இரண்டும். மவுனமடம் மேற்பார்வையில் நிகழ்வன. ஆண்டுதோறும் சித்திரை, பங்குனி மாதங்களில் முறையே தேர்த் திருவிழாவும் தெப்பத் திருவிழாவும் நிகழ்கின்றன. அன்றி சித்திரை வைகாசியில் மலைமேல் வசந்தோற்சவங்களும், ஆடிமாதத்தில் அம்மனுக்குத் தனியே ஆடிப்பூர உற்சவமும் நடைபெறுகின்றன. இவையன்றி நவராத்திரி விழா, கந்தர்சஷ்டி விழா முதலியனவும் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன.

## 11 திருப்பணி வரலாறு.

இத்திருக் கோயிலின் கட்டடங்களின் பல பாகங்களையும் பல பெரும் மன்னர்கள் பல்வேறு காலங்களில் செய்வித்திருக்கிறார்கள். அப்படியிருக்க சிலப்பதிகாரத்தில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கும் கி. பி. முதல் நூற்றாண்டின் காலத்ததாக மதிப்பிடப்படுகின்ற கொடும்பாளூர் என்ற நகரம், தற்காலம் விராலிமலைக்கு அணித்தாயுள்ள கிராமத்தில், அக்காலத்தில் மேன்மையாயிருந்த அனேகம் கட்டடங்களைப் பிரித்து இம்மலைமேல் கோவில் கட்டப்பட்டதாகவும் ஓர் செய்தி கேட்கப்படுகிறது (இன்னும் டை கொடும்பாளூரில் கிலமான கோபுரமும், வயல்களில் புதைப்பட்டு தற்காலம் எடுக்கப்படும் அழகிய சிவலிங்க உருவங்களும், தஞ்சாவூர்க் கோயில் பெரிய நந்தியின் முக்கால் பரிமாண அளவுடையதோர் நந்தியும் காணப்படுவதால் பழமைய நிலைமை ஒருவாறு சிந்தித்தற்கே துவுண்டு என்கின்றனர்.) அப்படியான கட்டங்கள் எதெது என்பது விளக்கமாகத் தெரியக்கூடவில்லை.

இயல்பாகவே திருமலைக்கொழுந்தாய் முளைத்திருக்கும் மூலவரான சிவலிங்கமூர்த்தி அமைந்துள்ள கருப்பக் கிருஹம் திரிசிரசு செய்த திருப்பணி.

அதைச் சுற்றிலும் கட்டியிருக்கிற திருமதில் **கண்டியன் தேவ மகாராஜா** செய்த திருப்பணி.

அதைச் சுற்றிலும் கம்பத்தடி சுற்றுவரைக்கும் **மகாபலி சக்ரவர்த்தி** செய்த திருப்பணி.

மூல லிங்கமூர்த்திக்கு முன்மண்டபம் சுற்றிலும் **சூராக்க சோழன் சக்ரவர்த்தி** செய்த திருப்பணி.

உச்சிப்பிள்ளையார் கோவிலும் சகஸ்ரலிங்கேசர் கோவிலும் சுகந்த குந்தளாம்பிகை திருக்கோயிலும் முன்மண்டபமும் சுற்று மண்டபமும் கரிக்கால்சோழன் செய்த திருப்பணி. கரிக்கால சோழன் ஆட்சி காலம் ஸா. 17-க்கு (A. D.)-95-முந்தின 45 வருடங்கள் சுமார்.

மலையைச் சுற்றிலும் கட்டியிருக்கிற திருமதில் **சூராக்க சோழன்** செய்த திருப்பணி.

வன்னியடிக்குத் தென்புறமிருக்கிற வாசல் **பிரபுடதேவ ராயர்** கட்டிய திருப்பணி.

கி. பி. ஆறும் நூற்றுண்டில் இருந்த பல்லவ மன்னரால் இம்மலைப்பாறையில் குடைந்து இரண்டு கோயில்களாக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று மலைமேலும், மற்றொன்று தெற்கு அடிவாரத்திலும் அமைந்துள்ளன. அவற்றிற்கு தூபி விமானங்களில்லை சில சிதைந்த திருவுருவங்கள் இருக்கின்றன மன்னன் புகழ்விளைய சிலாசாசனங்கள் காணப்படுகின்றன.

சாலியவாகன சகாப்தம் 1444. (கி. பி. 1522) **திருமலை சவுரி நாயக்கர்** கம்பத்தடி மண்டபம் கட்டிய திருப்பணி.

ஷை சகாப்தம் 1487 (கி. பி. 1565-ல்) திருக்கல்யாண நூற்றுக்கால் மண்டபம் **பெரியவீரப்ப நாய்க்கர்** செய்த திருப்பணி.

ஷை நாய்க்கர் காலத்தில் கோடைத் திருநாள் மண்டபமும் கொலுமண்டபமும் தீக்ஷப்பய்யர் செய்த திருப்பணி.

ஷை சகாப்தம் 1541 (கி. பி. 1619-ல்) விஜயரெங்க சொக்கநாத நாய்க்கர் கொட்டாரம் வன்னியடி மண்டபம் கட்டிய திருப்பணி.


ஷை சகாப்தம் 1630-ல் (கி. பி. 1708) விஜயரங்க சொக்கலிங்க நாயக்கர் காலத்தில் ஜெவந்தியாண்டி சேர்வைகாரன் முன்னிலையில் அநுப்பி என்கிற தேவ அடியாள், வன்னியடிக்குக் கீழ் ஐந்நூறு கால் மண்டபம் கட்டிய திருப்பணி. இதனை ஆயிரக்கால் மண்டபம் என்றும் சொல்லப்படுகிறது. (இம்மண்டபத்தின் குறுக்குச் சுவர்கள் அடைத்து கடைகளாக்கி வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இவையே மலைவாசல் கடைகள். மலைவாசல் ராஜகோபுரம் கீழ்த்தூணில் அநுப்பியம்மாள் உருவம் அமைந்திருப்பதை நாம் காணலாம். முகம்மதியர் படையெடுப்புக்கு முந்திய காலத்தில் உற்சவதினங்களில் சுவாமி இம்மண்டபத்தில் எழுந்தருளியிருந்து வீதி உலவப்போதல் வழக்கமாயிருந்தது.

ஷை சகாப்தம் 1462 முதல் 1474 வரை (கி. பி. 1540—1552) அரசுபுரிந்த விஸ்வநாத நாயக்கர் காலத்தில் தெப்பக்குளம் நடு நீராழி மண்டபம் கட்டிய திருப்பணி.

திருநெல்வேலி தளவாய் முதலியார் அவர்களால் வசந்த உற்சவங் கொண்டாடுவதற்காக உச்சிமலை வழியில் பதினாறு கால் மண்டபம் கட்டப்பட்டது.

## பிற்காலத்திருப்பணிகள்

1888 ம் ஆண்டில் உச்சிமலைக்குப் போகும் வழியில் இருந்த பெரியபள்ளம் தூர்க்கப்பட்டும், மேல்தளங்கள் தட்டோடு போடப்பட்டும், சித்திர மண்டபத்தில் வர்ணச் சித்திரங்கள் எழுதப்பெற்றும் அறுபத்துமூவர் தல அடியார்களுக்குக் குறடுகள் கட்டப்பட்டும், துவஜஸ்தம்பத்துக்குச் செப்புத்தகடுகள் போடப்பட்டும், மற்றும் பல திருப்பணிகளும் செய்யப்பட்டு 1899-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிறகு களவுபோய்ப் பழுதுபட்ட சுவாமிகோயில் தங்கவிமானம் புதுப்பிக்கப்பட்டு 1907-ம் கும்பாபிஷேகம்



Sri Thayumanavar's Nagabharanam

நடைபெற்றது. பிறகு 1918-ல் மணிமண்டபம் அமைக்கப் பட்டது.

1923-ம் ஆண்டில் மின்சார விளக்கு அமைக்கப்பட்டு கனந்தங்கிய ராஜப்பிரதிநிதி ரீடிங் பிரபு அவர்களால் 7—12—1923-ல் மின்சாரத் திறப்புவிழா நடைபெற்றது நாட்டரசங்கோட்டை அரு. சு.. வே. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்களின் பெருமுயற்சியால் கோவிலில் சித்திரங்கள் முதலிய திருப்பணிகளும், மலைவாசலில் புதிய கோபுரமும் அமைக்கப்பெற்று 13—6—27-ல் கும்பாபிஷேகம் மிக விமரிசையாய் நடைபெற்றது 1936-ல் மலைவாசல் ஸ்ரீ மாணிக்க விநயகர் கோயில் திருப்பணி செய்யப்பட்டது. 1941-ல் கீழிருந்து மேல்வரையில் படியேறும் அன்பர்கள் சௌகரியத்திற்கு கைப்பிடியாக இரும்புக் குழாய்கள் பொருத்தப்பெற்றன.

பிறகு 1944-ல் திருப்பணிக்குழு (Committee) ஏற்படுத்தப்பட்டுக் குழுவினரின் மேற்பார்வையில் கோபுரம், விமானங்கள் முதலியவைகட்குப் புது நிறங்கள் கொடுக்கப்பட்டன. உச்சிமலை விமானத்துக்குச் செல்லும் வழி கல்லால் புதுப்பிக்கப்பட்டது. தங்கக் கலசங்களில் சிதைந்த இடங்கள் பழுதுபார்க்கப்பட்டன. மூலமூர்த்திகட்கு மருந்து சேர்க்கப்பட்டது. முன் வாகன மண்டபத்தில் பஞ்சமூர்த்திகளின் உருவங்கள் சுதைவேலையில் புதியதாய் அமைக்கப்பெற்றன. மாணிக்க விநாயகர் கோயிலின் பிரகாரம் விரிவு செய்யப்பெற்று மேல்தளம் புதுப்பிக்கப்பெற்றது. இவ்வாறுகத் திருப்பணிகள் நடைபெற்று சுபானு ஆண்டு தை-மீ 18-ந் தேதி 31—1—1944 திங்கட்கிழமை அஷ்டபந்தன கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

திரு. மாணிக்க விநாயகர் சன்னதி எதிர் எக்ஞ மண்டபம் விரிவு செய்யப்பட்டும் தள வரிசை கற்கள் புதுப்பிக்கப் பெற்றும் விமானம் வர்ணம் வைக்கப்பட்டும் டி உத்ஸவ மூர்த்தி புதிதாக ஸ்தாபிக்கப் பட்டு 17-11-58 -உயில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

## 12. சொத்துக்கள், நிலம், வீடு முதலியன

இந்த ஜில்லாவில் சோழமாதேவி, வேங்கூர், கொக்கரசம்பேட்டை, தோகூர், மருதாண்டாக்குறிச்சி, பனையபுரம்,

தேவதானம், சோழங்கநல்லூர், கம்பரசம்பேட்டை, துவாகுடி முதலிய கிராமங்களில் கோவிலுக்குரிய நன்செய் நிலங்கள் உள்ளன.

பெரியகடை வீதியில் சுமார் 20 கடைகளும் மலைக்கோட்டை உள் வீதியிலும் வெளியிலும் சில காலி நிலங்களும் வீடுகளும் உள்ளன மௌனமடம் கட்டளை விசாரணையில் கோயிலின் கட்டளைக்குச் சொந்தமான நஞ்சை புஞ்சை கிராமங்களும், திருச்சி டவுனில் வீடுகளும் நிலங்களும் உள்ளன. மேலும் கோவிலுக்கும் மௌனமடம் கட்டளைக்கும் உரிய பல வாகனங்களும் எடுபிடிகளும் உள்ளன.

## 13. நகைகள்.

சர்க்கார் வசத்திலும் மௌனமடத்தின் வசத்திலும் காலக்கிரயப்படி சுமார் லக்ஷரூபாய் மதிப்புள்ள நகைகள் உள்ளன.

## 14. சுற்றுக் கோயில்கள்

இக்கோவிலைச் சேர்ந்த சுற்றுக் கோயில்கள் தேசுமிக்க ஐயனார் (நயினார்) கோவில், பிடாரி கோவில். அனுமார் கோவில், நந்திகோவில், மாணிக்கவிநாயகர்கோவில் முதலியன மலைவாசல் திரு மாணிக்கவிநாயகர் பிரத்தியட்ச மூர்த்தியாய் விளங்கி,வேண்டுவார்க்குச் சகல பேறுகளையும் அளித்து வருகின்றார்.

## 15. இத்தலத்திற்குரிய தேவாரமும், பிற தனிப்பாடல்களும்.

(1) **திருஞானசம்பந்த சுவாமிகள்** அருளிய தேவாரப்பதிகம் ஒன்று. 11 செய்யுட்கள் அடங்கியது.

1. நன்றுடை யானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

2. தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே.

(2) திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருக்குறுந் தொகை:—

1. மட்டு வார்குழ லாளொடு மால்விடை
யிட்ட மாவுகந் தேறு மிறைவனுர்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயுஞ்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே.

2 அரிய யன்றலை வெட்டிவட்டாடினுர்
அரிய யன்ருெழு தேத்து மரும்பொருள்
பெரிய வன்சிராப் பள்ளியைப் பேணுவார்
அரியயன்ருெழ வங்கிருப் பார்களே

3. அரிச்சி ராப்பக லைவரா லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சிராது நடக்கு நடக்குமே.

4. தாயு மாயெனக் கேதலைக் கண்ணுமாய்ப்
பேய னேனையு மாண்ட பெருந்தகை
தேய நாதன்சி ராப்பள்ளி மேவிய
நாய ஞரென நம்வினை நாசமே.

(3) ஐயடிகள் காடவர்கோன் இயற்றிய க்ஷேத்திரத் திரு வெண்பா:—

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடலிரா வண்ணம்—அழிந்த
திராமலையா கொண்டுபோ வென்னுமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

(4) பொய்யா மொழிப்புலவர் பாடல்கள்;—

1. கோட்டாற் பொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை

2. அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை
[வாளெயிற்று
வெங்கட் புலியைவிட்டி யானையைத் தேடி விதம்
[விதமாய்ச்
சிங்கமிருந்து தனிதனித் நோக்குஞ் சிராமலையே

தனிப்பாடல்:—

3. முலையுங்குழமு முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்ருள்—மலையிற்
சிராப்பளியா னேறிவருஞ் சேவின்மணி யோசைக்
கிராப் பளியுங் கொள்ளா ளிவள்

(5) மூவரம்மானையில் ஓர் செய்யுள்:—

சிரபுர மாவீசர் செட்டிமகட் காவேடம்
தரித்து மருத்துவஞ்செய் தாயாரு ரம்மானை
தரித்து மருத்துவஞ்செய் தாயாரு ராமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கன்றி மணமிவர்க்கே
[தம்மானை
மட்டுவார் குழலிருக்க மணமரிதோவம்மானை.

(6) திருவாசகப் பாடல்கள்:—

'சிராப்பள்ளி மேவிய சிவனேபோற்றி,'
நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனதுள்ளப்பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள்
கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(7) தாயுமான அடிகள் பாடிய பாடல்கள்:—

1. அங்கிங் கெனுதபடி யெங்கும் ப்ரகாச மாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்த தெது தன்னருள்வெளிக்
குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்

தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்த தெது மன வாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர்வழக்கிடவும் நின்றதெது
எங்கனும் பெருவ ழக்காய்
யாதினும் வல்ல வொரு சித்தாகியின் பமாய்
என்றைக்கு முள்ள தெது மேல்
கங்குல்பகலற நின்ற எல்லையுள தெது அது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலா மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்.

2. எடுத்ததேகம் பொருளாவி மூன்றுநீ
யெனக்கொன் றில்லையென மோன நன்னெறி
கொடுத்தபோது கொடுத்தன் ரேபினும்
குளறி நானென்று கூத்தாட மாயையை
விடுத்த வாறுங்கண் ணீரொடு கம்பலே
விலகு மாறுமென் வேட்கை ப்ரவாகத்தை
தடுத்த வாறும் புகலாய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே.

3. நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின்
நூலிற் சொன்ன முறையிய மாதிநான்
தோயும் வண்ண மெனைக்காக்குங் காவலும்
தொழும்பு கொள்ளுஞ் சுவாமியு நீகண்டாய்
ஓயுஞ்சன்ம மினியஞ்ச லஞ்சலென்று
உலகங் கண்டு தொழவோ ருருவிலே
தாயுந் தந்தையுமானோய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே.

4. தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ
சஞ்சல மது தீர்க்க
வந்த தேசிக வடிவுநீ யுனையலால்
மற்றொரு துணை காணேன்
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே
ஆதியே யடியார்தம்
சிந்தை மேவிய தாயுமானவ னெனும்
சிரகிரிப் பெருமானே.

5. ஐவகையெனும் பூத மாதியை வகுத்ததனு
   ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
   யாதி நூலையும் வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற்
   சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னை நானணுகவும்
   தண்ணருள் வகுக்க விலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணுத காட்சியே
   பொய்யிலா மெய்யரறிவிற்
போதபரிபூரண வகண்டிதா காரமாய்ப்
   போக்குவர வற்ற பொருளே
தெய்வமறை வடிவான பிரணவ சொரூபியே
   சித்தாந்த முத்து முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே
   சின்மயானந்த குருவே.

6. ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்
   அடங்க வெளி யாக வெளி செய்
தறியாமை யறிவாதி பிரிவாக அறிவார்கள்
   அறிவாக நின்.ற நிலையில்
சிந்தை யற நில்லென்று சும்மா இருத்தி மேல்
   சின்மயா னந்த வெள்ள ந்
தேக்கித் திளைத்து நான் அது வாயிருக்கநீ
   செய்சித்ர மிக நன் றுகாண்
எந்தைவட வாற்பரம குரு வாழ்க வாழஅரு
   ள்'யநந்தி மரபு வாழ்க
என்றடியர் மனமகிழ வேதாக மத்துணி
   பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்தி நெறி
   மௌ னுப தேச குருவே
மந்த்ர குரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
   மரபில் வரு மௌன குருவே

7. எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
   அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே

8. எத்திக்கும் தானுகி என்னிதயத் தேயூறித்
   தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே.

(8) அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் :—

தரையின் மரனுட ராசையி னுல்மடல்
எழுது மாலருள் மாதர்கள் தோதக
சரச மாய்மல ரோதியி னுலிரு கொங்கையாலும்
சதிசெய் நூலிடை யால்நடை
அழகி னுல்மொழி யால்விழி யால்மருள்
கவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ
பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிகள்
அணுகொ ணுவகை நீடுமி ராசிய
பவன பூரக ரேசக மாகிய விந்துநாதம்
பகரொ ணுதது சேரவொ ணுதது
திணையொ ணுதது வானத யாபர
பதிய தானச மாதிம னுலயம் வந்துதாராய்
சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி நோதச மேளத யாபர அம்புராசித்
திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு ஞ்சிவாழும்
மறவர் நாயக ஆதிவி நாயக
இளைய நாயக காவிரி நாயக
வடிவி னுயக ஆனந்த னுயக எங்கள்மானின்
மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னுர்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே.

## 16 தனி நூல்கள்

(1) செவ்வந்திப் புராணம் என்னும் திரிசிராமலைப் புராணம் சைவ எல்லப்ப நாவலர் இயற்றியது. 11 சருக்கங்கள் அடங்கியது. 550 பாடல்கள் கொண்டது.

### செவ்வந்தி விநாயகர்

1. அருளெனுங் கடல்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை யுதசெவ் வந்தி யானையின்
றிருவடி யிணைமலர் சென்னி சேர்த்துவாம்.

முருகக்கடவுள்

2. ஓகையாற் றிரைமுன் ஞளி லுழக்குமா விளேயும் வாட்டு
மேகவெவ் வைரயினெல்லே யிடித்திடு மிகையோர் போற்றத்
தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலே வணங்குவ தெமக்கு வேலே.

செவ்வந்திப்பெருமான்

3. சொற்கொண்ட கிளியனேயா ரனங்கனுக்குத்
துணேயாகத் துணேப்பு ரூர
விற்கொண்டு விளேயாடுந் திரிசிரா
மலேயிலுறை விமலன் றன்னேப்
பொற்கொண்ட நிறந்தானுங் கரியமுகி
னிகர்வானும் புலரா வண்ண
மற்கொண்ட மிடற்ருனேச் செவ்வந்திப்
பெருமானே யகத்திற் சேர்ப்பாம்,

மட்டுவார்குழலம்மை

4. பனிகொ வரையிற் பிறந்தபிடி
பரனு ரிடத்திற் பறந்தகொடி
முனிவ ரிமையோர் மகிழவற
முப்பத் திரண்டும் வளர்த்தருளும்
வனிதை வடிவே லனேப்பயந்த
மடந்தை மட்டு வார்குழலாள்
இனிய பதமா மிருபோதுந்
தலேமேற் றரிப்பா மிருபோதும்.

(2) கலித்துறை யந்தாதி. இது 104 செய்யுட்களேக் கொண்டது. மலேமேலுள்ள குகைக் கோவிலில் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. வேம்பையர்கோன் நாராயணன் என்பவரால் இயற்றப்பட்டது,

1. நெஞ்சந் துணேயுண்டு நீர்நிலத் துண்டு நிழலுமுண்டு
தஞ்சப் பெருக்குள தானஞ் சிராமலேச் சாரலுண்டு
துஞ்சுந் துணேயுஞ் சிவனேத் தொழுது துறக்க மெய்தார்
பஞ்ச நலியப் பலிதிரி வார்சிலர் பாவியரே.

2. பொய்வினைப் பேசிப் பொருளினைத்
தேடிப் புழுப்பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந்
தேன்வியன் பொன்மலைமேல்
ஐயனைத் தேவர்தங் கோனையெம்
மானையம் மான்மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த
பிரானைக் கழல்பணிந்தே.

(3) சிராமலைக்கோவை. மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்தது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தாயாகி வந்தொரு பேதையைக் காத்த தனிமுதலோன்
வேயான தோளுமை பாகன் சிராமலை மேவிவளர்
பாயாத வேங்கை பயிலும் புனத்துப் பவளவுரு
வாயாகும் வேங்கையைக் கண்டேன்வண் டேன்முரல்
வார் குழலே.

(4) சிரகிரி உலா. இந்நூல் கிடைக்கவில்லை. சில கண்ணிகள் மட்டும் உள்ளன.

..............மட்டுவார் குழலாம்
நல்லாளோடின்ப நகைமேவிச் சொல்லார்ந்த
மூவர் முதலோர் முழுத்தமிழு மன்புடையார்
யாவர் தமிழு மணிந்தருள்வோன் - ஆவியாய்
அத்தனு மாவதன்றி யன்னையுந்தா னுயபிரான்
சித்த மகிழ்தென் சிரகிரியான் - சுத்த
நிலாவும் பகீரதியு நீண்ட சடைமேல்
உலாவவே போந்தா னுலா.
(சிராமலைக்கோவை)

(5) திரிசிரபுரம் மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய யமக அந்தாதி.

திருமா திருக்குமணி மார்ப னுன்முகன் றேவர்செங்க
திருதா திருகுந் தொழநின்ற நாயகன் றீவினைமு
திருமா திருக்கு மடியார்க் கறுக்குஞ் சிராமலையான்
திருமா திருக்கு நுதலான் பொற்றாளென் சிரம்வைப்பனே.

## ஆலய நிர்வாகம்.

இத்திருக்கோயிலின் நிர்வாக வரலாற்றை நோக்குங் கால், தமிழ் மன்னர்கள் முதல், வட்டரீதியாக அமைக்கப் பட்ட ஆலயக்குழு (Temple Committee) ஈறுக. பல தரப் பட்ட நிர்வாகங்கள் நடந்து வந்துள்ளன. பின்னர் இந்து மத அறநிலைய சபை (Hindu Religions Endowments Board) யின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, தர்ம கர்த்தர்கள் நியமனம் செய்யப்பட்டனர். பின்னர் நிர் வாகத்தை இன்னும் சிறந்த முறையிலே நடத்தும்பொருட்டு ஊதியம் பெறும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். தர்ம கர்த்தர்கள், நிர்வாக அதிகாரி, இவர்களின் வேறு பட்ட பொறுப்புகளை நிர்ணயிக்கும் பொருட்டு ஒரு திட்டம் (Scheme) இந்து மத அறநிலைய சபையினரால் தங்கள் உத்திரவு எண். 2601 29—9—1938 3343/2—10-46 படி, செயல்படுத்தப்பட்டு அதில் கண்டுள்ளபடி, இத்திருக் கோயிலின் நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இத்திருக் கோயிலில் நடைபெற்றுவரும் நான்கு கால வழிபாடுகளுள், இரண்டு காலம் தருமை ஆதீனத்தாரால் மேற்பார்வை யிடப்பட்டுவரும் மௌனமடத்தினரால் இத்திருக்கோயிலின் சொத்துக்களின் ஒரு பகுதியிலிருந்துவரும் வருமானத்தைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றது. மீதி இரண்டு காலம் இத்திருக்கோயிலின் நேரடி நிர்வாகத்தில் நடந்து வருகின்றது. ஆதியில் ஒரே நிர்வாகத்திலிருந்து, அற நிலைய இலாகாவின் உத்திரவுக் கிணங்க. பொறுப்பு ஒப் படைக்கப்பட்ட பொழுது நிர்வாகம் இரண்டுபட்டிருக்க வேண்டும் என்பது கண்கூடு, ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட வருமானம் ஷை மௌன மடத் திற்கு வந்துக்கொண்டிருக்கின்றது. இரட்டை நிர்வாகம் இத்திருக்கோயிலின் தனிப்பட்ட குறை; குறையை நிறை செய்ய இறையின் கருணை வேண்டும். இத்திருக்கோயிலின் தனிப்பட்ட வருமானம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ 65000 இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக சுமார் 33 ... ஏக்கர் நஞ்சை நிலமும், கடைகள், வீடுகள், மனைகள் மூலம் வரு வாயும், உண்டியல் வரவு, அர்ச்சனை விகித வரவும். இத் திருக்கோயிலின் நிர்வாகத்திற்கு உதவுகின்றது.

தற்சமயம் இத்திருக்கோயிலில் அறங் கூறும் காவலர்கள் மூவரும், நிர்வாக அதிகாரி ஒருவரும், தமிழ்நாடு இந்து மத அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் நியமிக்கப்பட்டு நிர்வாகம் செய்து வருகின்றனர்.

ஏ. முத்துக்குமரன்,
அறக்குழு தலைவர்.

S. மகாராஜன், B.A., B.T.,
நிர்வாக அதிகாரி.

ஆர். ஜெயதேவன்,
ஏ. ஜி. சன்னசி,
} அறங்காவலர்கள்.

## அரசினர் ஆணைப்படி இத்திருக்கோயிலில் பணிபுரிந்த அறங்காவலர்கள் பெயரும், காலமும்.

---

| முன்னாள் அறங்காவலர்கள். | | காலம். |
|---|---|---|
| திரு. | சி. ஆர். சீனுவாசமுதலியார் | 16—6—35 ... 14—8—38 |
| ,, | எஸ் ஜெம்புநாத அய்யர் | 10—2—36 ... 29—5—38 |
| ,, | என். சங்கரம் பிள்ளை | 27—3—38 .... 14—8—38 |
| ,, | டி. வி ஆறுமுகம் பிள்ளை | 28—9—43 .... 28—9—48 |
| ,, | வி. கல்யாணசுந்தரம்பிள்ளை | 28—9—43 .... 28—9—53 |
| ,, | கே. சின்னச்சாமி அய்யர் | 28—9—43 ... 28—9—58 |
| ,, | டி. எம். முத்துசாமி பிள்ளை | 5—6—46 .... 4—6—61 |
| ,, | ஏ. சிதம்பரம் பிள்ளை | 18-11—50 ... 17-11—60 |
| ,, | ஆ. சின்னையா நாயுடு | 30—4—56 ... 30—4—61 |
| ,, | ஆ. கோ. சன்னுசி | 17-11—55 ... 17-11—60 |

இன்னாள் அறங்காவலர்கள்:—

| | | | |
|---|---|---|---|
| திரு. | ஏழுமுத்துக்குமரன் அறக்குழு தலைவர் | 22-11—58 | முதல் |
| ,, | ஆர். ஜெயதேவன் | 27—1—61 | ,, |
| ,, | ஆ. கோ. சன்னுசி | 27—1—61 | ,, |

★

# இத்திருக்கோயிலில் அரசினர் ஆணைப்படி, பணிபுரிந்த நிர்வாக அதிகாரிகளின் பெயரும், காலமும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ். ராமலிங்க நாயுடு பி. ஏ. பி. எ ல்., .... | 20—1—39 .... | 14—8—39 |
| 2. | ,, கே. சிதம்பரம் பிள்ளை பி. ஏ. பி. எல் , ... | 14—8—39 ... | 6-11—39 |
| 3. | ,, எஸ் ராமலிங்க நாயுடு பி. ஏ. பி. எல். ... | 6—11—39 ... | 12—1—40 |
| 4. | ,, கே. சிதம்பரம் பிள்ளை பி ஏ. பி. எல்., .... | 12—1—40 ... | 17-10—40 |
| 5. | ,, எஸ். வி. சீனுவாச அய்யங்கார் பி ஏ. பி. எல்., .. | 17-10—40 ... | 15—2—41 |
| 6. | ,, எஸ். ராமலிங்க நாயுடு பி. ஏ. பி. எல்., ... | 15—2—41 .... | 19-10—43 |
| 7. | ,, பி. சுப்பையா பிள்ளை .... | 19-10—43 ... | 15—3—44 |
| 8. | ,, எம்.வி. ராமதாஸ்நாயுடு... | 16—3—44 .... | 5—7—47 |
| 9. | ,, வீ சுந்தரராஜ பிள்ளை பி. ஏ. பி. எல்., ... | 5—7—47 ... | 25—3—48 |
| 10. | ,, எல். பி. கந்தசாமி பிள்ளை... | 25—3—48 .... | 31—3—49 |
| 11. | ,, கே. வீரைய்யன் (இன்ஸ்பெக்டர் இந்துமத அறநிலைய இலாகா) ... | 31—3—49 .... | 4—5—49 |
| 12. | ,, என். ராஜகோபாலய்யா பி. ஏ. பி எல்., ... | 4—5—49 .... | 30—6—50 |
| 13. | ,, டி. சிதம்பரம் பிள்ளை பி. ஏ., ... | 30—6—50 ... | 1-10—51 |
| 14 | ,, எஸ். நாகராஜ அய்யர் (இன்ஸ்பெக்டர் இந்துமத அறநிலைய இலாகா) ... | 1-10—51 ... | 20-10—51 |
| 15. | ,, டி. எம். முத்துசாமி பிள்ளை (டிரஸ்டி இன்சார்ஜ்)... | 20-10—51 ... | 15—4—52 |

| | | | |
|---|---|---|---|
| 16. திரு. இ. எஸ் ஆதித்தராமன் பி. ஏ. | ... | 15—4—52 ... | 30—1—53 |
| 17. ,, எம். சேவகப்பெருமாள் பிள்ளை பி. ஏ. | ... | 30—1—53 ... | 1—4—53 |
| 18. ,, எல். முத்துகிருஷ்ணன் பி. ஏ., | ... | 1—4—53 ... | 15-12—53 |
| 19. ,, ஆர். ராமய்யா நாயுடு பி. ஏ., | ... | 15-12—53 ... | 1—6—55 |
| 20. ,, ஜி. சோமசுந்திரம் பி. எஸ்ஸி., | ... | 1—6—55 ... | 30—6—55 |
| 21. ,, எஸ். ஆர். கோவிந்தராஜுலு | | 30—6—55 ... | 10—2—57 |
| 22. ,, எம். பரமசிவம் எம். ஏ. | .... | 11—2—57 .... | 22—5—57 |
| 23. ,, வி. கருப்பண்ணபிள்ளை | ... | 23—5—57 ... | 13—6—57 |
| 24. ,, எம். பரமசிவம் எம். ஏ. | ... | 13—6—57 ... | 30—4—59 |
| 25. ,, ஏ. நாராயணசாமி பி. ஏ | ... | 1—5—5 .... | 24—8—59 |
| 26. ,, வி. கருப்பண்ணபிள்ளை | ... | 25—8—59 ... | 16-12—59 |
| 27. ,, வி. முருகன் (இன்ஸ்பெக்டர் இந்துமத அறநிலைய இலாகா) | .... | 16-12—59 ... | 20—1—60 |
| 28. ,, டி. புருஷோத்தம ரெட்டியார் | ... | 20—1—60 .... | 27—5—60 |
| 29. ,, எஸ். மகாராஜன் பி. ஏ. பி. டி. | ... | 27—5—60 | முதல் |

# இக்கோயிலில் பத்து வருட வருமானம்

| விபரம். | | | ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1361-ம் பசலி | | .... | 54370—5—6 |
| 1362 | ,, | .... | 56457-15-10 |
| 1363 | ,, | .... | 51029—4—4 |
| 1364 | ,, | .... | 54375—3—4 |
| 1365 | ,, | .... | 57280—7—2 |
| 1366 | ,, | .... | 55611—11np |
| 1367 | ,, | .... | 59829—93 ,, |
| 1368 | ,, | .... | 63959—34 ,, |
| 1369 | ,, | .... | 62604—36 ,, |
| 1370 | ,, | .... | 69083—29 ,, |

லலிதா அச்சகம், சின்னக்கடைவீதி, திருச்சி-2,

Wrapper Printed at Chain Printers, Cantonment, Tiruchirapalli - 1.